பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

12 09 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. எழுபது வயது நிறைவடைந்த அனைவருக்கும் ஐந்து லட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவக் காப்பீடு வழங்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. விருதுநகரில் அமையவுள்ள ஜவுளி பூங்கா மூலம் ஒரு லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
3. பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுவதாக மாநில விளையாட்டுத் துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.
5. 45-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் முதல் சுற்றில் இந்தியா அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

<u>*--- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

எழுபது வயது நிறைவடைந்த அனைவருக்கும் ஆயுஷ்மான பாரத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஐந்து லட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவ காப்பீடு வழங்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இதனால் ஆறு கோடி மூத்த குடிமக்கள் பயனடைவார்கள் என்று கூறினார்.

வருமானத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் இந்த மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்கீழ் தகுதிவாய்ந்த மூத்த குடிமக்களுக்கு விரைவில் காப்பீட்டு அட்டை வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் கிராம சாலை திட்டத்தின் நான்காவது கட்டமாக புதிதாக 65 ஆயிரம் கிலோமீட்டர் சாலைகளை அமைக்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டம் 70 ஆயிரத்து 125 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தின் மூலம் 25 ஆயிரம் கிராமங்கள் பயன்பெறும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த எட்டு ஆண்டுகளில் 31 ஆயிரத்து 350 மெகாவாட் திறன் கொண்ட நீர்மின் நிலையங்களை கட்டமைப்பதற்கு 12 ஆயிரத்து 461 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மின்சார வாகன போக்குவரத்தை ஊக்குவிக்க பிரதமரின் இ-டிரைவ் திட்டத்தின் கீழ் பத்தாயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாக அவர் கூறினார்.

மின்சார பேருந்துகள் பயன்பாட்டை அதிகரிக்கவும், அவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும் மூவாயிரத்து 435 கோடி ரூபாய் ஒதுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதகாவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.,

[]<<<>>>[]

விருதுநகர் அருகே உருவாக்கப்படும் ஜவுளிப் பூங்கா மூலம் ஒரு லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

கோவையில் நேற்று நடைபெற்ற தொழில்துறை பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய அவர், தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் சிக்கல்களை குறைக்க தேவையற்ற ஆயிரத்து 500 சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு தொழில் வழித்தடத்தின் மூலம் கோவை பகுதி அதிக அளவில் பயனடையும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

*( சவுண்ட்பைட் - நிர்மலா ) --62--- செகண்ட்*

[]<<<>>>[]

தேர்தல் வாக்குறுதிகளை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு நிறைவேற்றி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

கோவையில் விநாயகர் ஊர்வலத்தை தொடங்கி வைத்து பேசிய அவர், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கு எட்டப்படும் என்று கூறினார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) -33---- செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஏ வ வேலு அதிகாரிகளை கேட்டுக்கெண்டுள்ளார்.

இது தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், திருவான்மியூர் முதல் அக்கரை வரை உள்ள சாலையை ஆறு வழித்தடமாக அகலப்படுத்துவதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெறும்போது உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினார்.

கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் வடிகால் பணிகள் மற்றும் சாலை பணிகளை விரைந்து பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டுமென்றும் திரு ஏ வ வேலு கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுவதாக மாநில விளையாட்டுத் துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று தெற்காசிய ஜூனியர் தடகளப் போட்டிகளை தொடங்கி வைத்து பேசிய அவர், செஸ் ஒலிம்பியாட், கேலோ இந்தியா, ஆசிய சாம்பியன் ஹாக்கி உள்ளிட்ட தேசிய மற்றும் சர்வதேச போட்டிகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் அதிக அளவில் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு ஒவ்வொரு துறையிலும் நூறு வீரர்களுக்கு பணி வழங்கும் நடைமுறை விரைவில் நிறைவு செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு மைதானங்களை சீரமைக்கவும், உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் 100 கோடி ரூபாய் செலவில் பணி நடைபெற்று வருவதாகவுத் திரு உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ஈரான் அதிபராக திரு மசூத் பெசஸ்கியான் பதவியேற்ற பின்னர் முதல் வெளிநாட்டுப் பயணமாக ஈராக் சென்றுள்ளார்.

[]<<<>>>[]

தென் சீனக் கடல் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக அமெரிக்கா மற்றும் சீன ராணுவ தளபதிகள் பேச்சு நடத்தியுள்ளனர்.

[]<<<>>>[]

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி திரு சந்திரசூட் இல்லத்தில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி வழிபாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று வழிபாடு செய்தார்.

[]<<<>>>[]

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் தூய்மை இயக்கத்தின் முன்னேற்பாடுகள் குறித்து மத்திய அமைச்சர்கள் திரு மனோகர் லால் மற்றும் திரு சி ஆர் பாட்டீல் தலைமையில் புதுதில்லியில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

[]<<<>>>[]

ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் நடைபெறும் பாதுகாப்புத் துறை கண்காட்சியில் இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் அரங்கத்தை மத்திய இணை அமைச்சர் திரு சஞ்சய் சேத் திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

ஜம்மு காஷ்மீர் சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்புத் தூதர்களாக பாராலிம்பிக்கில் பதக்கம் வென்ற ராகேஷ் குமார், ஷீத்தல் தேவி ஆகியோரை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை பகுதியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டத்தில் நகர்புற கைத்தறி நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 16 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஆட்சியாதிருமதி உமா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தேனி மாவட்டம் வயல்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 151 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி ஷஜீவனா வழங்கினார்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் சேரங்கோடு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு துறை போலீஸார் நடத்திய சோதனையில் கணக்கில் வராத மூன்று லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சி நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு கராத்தே. டேக்வாண்டோ பயிற்சிகள் வழங்கும் திட்டத்தை மேயர் திருமதி பிரியா நேற்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

45-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் முதல் சுற்றில் இந்தியா அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

ஹங்கேரியின் குடாபெஸ்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்திய அணி நான்கு – பூஜ்ஜியம் என்ற கணக்கில் மொராக்கோவை வென்றது.

மகளிர் பிரிவில் இந்திய அணி மூன்று புள்ளி ஐந்து, புள்ளி ஐந்து என்ற கணக்கில் ஜமைக்காவை வீழ்த்தியது.